*புதுச்சேரி அரசு*

*துணைநிலை ஆளுநர் செயலகம்*

**No. LGS/PRO/2026** **26 ஜூலை 2026**

# <u>பத்திரிகை செய்தி</u>

புதுச்சேரி அரசு சார்பில் கார்கில் வெற்றி தினம் இன்று (26.07.2026) கொண்டாடப்பட்டது. அதனை ஒட்டி கடற்கரை சாலை, கார்கில் போர் நினைவிடத்தில் மாண்புமிகு துணை நிலை ஆளுநர் மலர் வளையம் வைத்து போர்வீரர்களுக்கு மரியாதை செலுத்தினார்.

செய்தி மற்றும் விளம்பரத் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மாண்புமிகு முதலமைச்சர் திரு ந. ரங்கசாமி, மாண்புமிகு சட்டப்பேரவை தலைவர் திரு அன்பழகன், மாண்புமிகு அமைச்சர்கள் திரு ராஜவேலு, திரு சிவக்கொழுந்து, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலர் டாக்டர் சரத் சவுகான், காவல்துறை தலைமை இயக்குனர் திருமதி ஷாலினி சிங், மாவட்ட ஆட்சியர் திரு குலோத்துங்கன், அரசு உயர் அதிகாரிகள், முன்னாள் படை வீரர்கள் கலந்து கொண்டனர்.